

Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji

स्वर्ण भारती

ஸ்வர்ண பா⁴ரதீ

|| कल्याणवृष्टिस्तवः ||

||கல்யாணவ்ரு’ஷ்டிஸ்தவ:||

வரிசை எண் 8

We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,
दक्षिणाम्नाय श्रीशारदापीठम्, शृङ्गेरी
Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam
Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139.

श्रृङ्गगिरिः १३.४.२०२४

दक्षिणाम्नायश्रृङ्गेरीशारदापीठाधीश्वराणाम् अनन्तश्रीविभूषितानां परमपूज्यानां जगद्गुरु शङ्कराचार्याणां श्रीभारतीतीर्थमहास्वामिनां संन्याश्रमस्वीकारस्वर्णमहोत्सवसन्दर्भं पुरस्कृत्य मुद्रितचराणां अधुना दुर्लभंगतानां विशिष्टानां गैर्वाणीग्रन्थाणां अन्तर्जालमाध्यमेन पुनः प्रकाशनं क्रियत इति विदित्वा जगद्गुरुचरणाः नितराममोदन्त । श्रीशारदाचन्द्रमौलीश्वरयोरसीमया कृपया कार्यमिदं सुष्ठु प्रवर्तताम्, कार्येऽस्मिन् कृतसाह्यास्समेऽपि सज्जनाः श्रेयांसि समधिगच्छन्त्विति च श्रीजगद्गुरुचरणा आशासते ।

इति निवेदयिता
टि दक्षिणामूर्तिः

Phone: 08265 - 250123 / 250192 • Fax: 08265 - 250792
E-mail: info@sringerisharadapeetham.org • www.sringerisharadapeetham.org

ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் பொற்பாதங்களில் எங்களின் முயற்சியை சமர்ப்பிக்கிறோம்.

"கல்யாண வ்ரு'ஷ்டி ஸ்தவ:" என்ற இந்த நூல் எளிமையாகவும், ப்ரதி பத அர்த்தத்துடனும் மிகவும் அழகாகவும் ஸாதகர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக விளங்கும் இந்த நூல் ஸ்ரீ ஜகத்குரு க்ரந்தமாலா (பாகம் 2) இல் இருந்து எடுக்கப் பட்டுள்ளது.

இப்படிக்கு,
ஸ்ரீமதி வீரமணி.

॥श्रीगुरुवन्दनम्॥

श्रीगुरुभ्यो नमः

शङ्कारूपेण मच्चित्तं पङ्कीकृतमभूद्यया ।
किङ्करी यस्य सा माया शङ्कराचार्यमाश्रये ॥

प्रह्लादवरदो देवो यो नृसिंहः परो हरिः ।
नृसिंहोपासकं नित्यं तं नृसिंहगुरुं भजे ॥

श्रीसच्चिदानन्दशिवाभिनवव्यनृसिंहभारत्यभिधान् यतीन्द्रान् ।
विद्यानिधीन् मन्त्रनिधीन् सदात्मनिष्ठान् भजे मानवशम्भुरूपान् ॥

सदात्मध्याननिरतं विषयेभ्यः पराङ्मुखम् ।
नौमि शास्त्रेषु निष्णातं चन्द्रशेखरभारतीम् ॥

विवेकिनं महाप्रज्ञं धैर्यौदार्यक्षमानिधिम् ।
सदाभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे ॥

अज्ञानां जाह्नवीतीर्थं विद्यातीर्थं विवेकिनाम् ।
सर्वेषां सुखदं तीर्थं भारतीतीर्थमाश्रये ॥

विद्याविनयसम्पन्नं वीतरागं विवेकिनम् ।
वन्दे वेदान्ततत्त्वज्ञं विधुशेखरभारतीम् ॥

पञ्चाशल्लिपिभिर्विभक्तमुखदोः पन्मध्यवक्षस्थलां
भास्वन्मौलिनिबद्धचन्द्रशकलामापीनतुङ्गस्तनीम् ।
मुद्रामक्षगुणं सुधाढ्यकलशं
विद्याञ्च हस्ताम्बुजैः
बिभ्राणां विशदप्रभां त्रिनयनां वाग्देवतामाश्रये ॥

श्रीमत्परमहंस-परिव्राजकाचार्यवर्य-पदवाक्यप्रमाणपारावारपारीण-यमनियमासनप्राणायामप्रत्याहारधारणाध्यानसमाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठ-तपश्चक्रवर्ति-अनाद्यविच्छिन्नश्रीशङ्कराचार्यगुरुपरंपराप्राप्त-षड्दर्शनस्थापनाचार्य-व्याख्यानसिंहासनाधीश्वर-सकलनिगमागमसारहृदय-सांख्यत्रयप्रतिपादक-वैदिकमार्गप्रवर्तक-सर्वतन्त्रस्वतन्त्र-आदिराजधानी-विद्यानगरमहाराजधानी-कर्णाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य-श्रीमद्राजाधिराजगुरु-भूमण्डलाचार्य-ऋष्यशृङ्गपुरवराधीश्वर-तुङ्गभद्रातीरवासि-श्रीमद्विद्याशङ्करपादपद्माराधक-

श्रीमज्जगद्गुरु-श्रीमदभिनवविद्यातीर्थमहास्वामिगुरुकरकमलसञ्जात-

श्रीमज्जगद्गुरु-श्रीभारतीतीर्थमहास्वामिनां-

तत्करकमलसञ्जात-श्रीमज्जगद्गुरु-श्रीविधुशेखरभारतीमहास्वामिनां च चरणारविन्दयोः साष्टाङ्गप्रणामान् समर्पयामः ॥

||ஸ்ரீகு³ருவந்த³னம்||
ஸ்ரீகு³ருப்⁴யோ நம:
ஶங்காரூபேண மச்சித்தம்’ பங்கீக்ரு’தமபூ⁴த்³யயா |
கிங்கரீ யஸ்ய ஸா மாயா ஶங்காராசார்யமாஶ்ரயே ||
ப்ரஹ்லாத³வரதோ³ தே³வோ யோ ந்ரு’ஸிம்’ஹ: பரோ ஹரி: |
ந்ரு’ஸிம்’ஹோபாஸகம்’ நித்யம்’ தம்’ ந்ரு’ஸிம்’ஹகு³ரும்’ ப⁴ஜே ||
ஸ்ரீஸச்சிதா³னந்த³ஶிவாபி⁴நவ்யந்ரு’ஸிம்’ஹபா⁴ரத்யபி⁴தா⁴ன் யதீந்த்³ரான் |
வித்³யாநிதீ⁴ன் மந்த்ரநிதீ⁴ன் ஸதா³த்மநிஷ்டா²ன் ப⁴ஜே மானவஶம்பு⁴ரூபான் ||
ஸதா³த்மத்⁴யானநிரதம்’ விஷயேப்⁴ய: பராங்முக²ம் |
நௌமி ஶாஸ்த்ரேஷு நிஷ்ணாதம்’ சந்த்³ரஶேக²ரபா⁴ரதீம் ||
விவேகினம்’ மஹாப்ரஜ்ஞம்’ தை⁴ர்யௌதா³ர்யக்ஷமாநிதி⁴ம் |
ஸதா³பி⁴னவபூர்வம்’ தம்’ வித்³யாதீர்த²கு³ரும்’ ப⁴ஜே ||
அஜ்ஞானாம்’ ஜாஹ்னவீதீர்த²ம்’ வித்³யாதீர்த²ம்’ விவேகினாம் |
ஸர்வேஷாம்’ ஸுக²த³ம்’ தீர்த²ம்’ பா⁴ரதீதீர்த²மாஶ்ரயே ||
வித்³யாவினயஸம்பன்னம்’ வீதராக³ம்’ விவேகினம் |
வந்தே³ வேதா³ந்ததத்த்வஜ்ஞம்’ விது⁴ஶேக²ரபா⁴ரதீம் ||
பஞ்சாஶல்லிபிபி⁴ர்விப⁴க்தமுக²தோ³: பன்மத்⁴யவக்ஷஸ்த²லாம்’
பா⁴ஸ்வன்மௌலிநிப³த்³த⁴சந்த்³ரஶகலாமாபீனதுங்க³ஸ்தனீம் |
முத்³ராமக்ஷகு³ணம்’ ஸுதா⁴ட்⁴யகலஶம்’
வித்³யாஞ்ச ஹஸ்தாம்பு³ஜை:
பி³ப்⁴ராணாம்’ விஶத³ப்ரபா⁴ம்’ த்ரிநயனாம்’ வாக்³தே³வதாமாஶ்ரயே ||

ஸ்ரீமத்பரமஹம்’ஸ-பரிவ்ராஜகாசார்யவர்ய-பத³வாக்யப்ரமாணபாராவாரபாரீண-யமநியமாஸனப்ராணாயாமப்ரத்யாஹாரதா⁴ரணாத்⁴யானஸமாத்⁴யஷ்டாங்க³யோகா³னுஷ்டா²னநிஷ்ட²-தபஶ்சக்ரவர்தி-அநாத்³யவிச்சி²ன்னஸ்ரீஶங்கராசார்யகு³ருபரம்பராப்ராப்த-ஷட்³த³ர்ஶனஸ்தா²பனாசார்ய-வ்யாக்²யானஸிம்’ஹாஸனாதீ⁴ஶ்வர-ஸகலநிக³மாக³மஸாரஹ்ரு’த³ய-ஸாங்க்²யத்ரயப்ரதிபாத³க-வைதி³கமார்க³ப்ரவர்தக-ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர-ஆதி³ராஜதா⁴னீ-வித்³யாநக³ரமஹாராஜதா⁴னீ-கர்ணாடகஸிம்’ஹாஸனப்ரதிஷ்டா²பனாசார்ய-ஸ்ரீமத்³ராஜாதி⁴ராஜகு³ரு-பூ⁴மண்ட³லாசார்ய-ரு’ஷ்யஶ்ரு’ங்க³புரவராதீ⁴ஶ்வர-துங்க³ப⁴த்³ராதீரவாஸி-ஸ்ரீமத்³வித்³யாஶங்கரபாத³பத்³மாராத⁴க-
ஸ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஸ்ரீமத³பி⁴னவவித்³யாதீர்த²மஹாஸ்வாமிகு³ருகரகமலஸஞ்ஜாத-
ஸ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஸ்ரீபா⁴ரதீதீர்த²மஹாஸ்வாமினாம்’-
தத்கரகமலஸஞ்ஜாத-ஸ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஸ்ரீவிது⁴ஶேக²ரபா⁴ரதீமஹாஸ்வாமினாம்’ ச சரணாரவிந்த³யோ: ஸாஷ்டாங்க³ப்ரணாமான் ஸமர்பயாம: ||

|| श्रीः ||

|| कल्याणवृष्टिस्तवः ||

||கல்யாணவ்ரு’ஷ்டிஸ்தவ:||

ஶ்ரீசங்கரபகவத்பாதர் அருளிய ஸ்தோத்ரங்களில் அந்தந்த தேவதையின் மூலமந்திரங்களைக்கொண்டே அதாவது மூல மந்திரத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்தையும் ஒவ்வொரு சுலோகத்தில் அதே வரிசைப்படி முதலில் வைத்து சில ஸ்தோத்திரங்களை இயற்றியுள்ளார்கள். தக்ஷிணாமூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்ரமும், மந்த்ரமாத்ருகா புஷ்பமாலா ஸ்தவமும் இந்த கல்யாண வ்ருஷ்டி ஸ்தவமும் இம்மாதிரி அமைந்துள்ளவை. ஒவ்வொரு சுலோகத்திலும் பஞ்சாக்ஷர மந்திரம் முழுவதையும் வைத்து சிவபஞ்சாக்ஷர ஸ்தோத்ரம், சிவ பஞ்சாக்ஷர நக்ஷத்ரமாலா ஸ்தோத்ரம் என்ற இரண்டு ஸ்தோக்ரங்கள் செய்துள்ளார்கள் "कल्याणवृष्टिभिः" என்று ஆரம்பிப்பதால் இதற்கு 'கல்யாண வ்ருஷ்டி ஸ்தவம்' என்றே பெயர் அமைந்துள்ளது 16 சுலோகங்கள் கொண்ட இதில் பரதேவதையின் பெருமை அழகாக வர்ணிக்கப்படுகிறது. இந்த ஸ்தோத்ரத்தில் உள்ள ஒவ்வொரு சுலோகத்திலும் ஆரம்பத்தில் ஶ்ரீ வித்யா மஹா மந்திரத்திலுள்ள 15 அக்ஷரங்களும் வரிசையாகக்காணப்படுகிறது. பலனைக்கூறும் 16வது சுலோகத்தின் ஆரம்பத்தில் தேவி பீஜாக்ஷரத்தைக்காணலாம்.)

कल्याणवृष्टिभिरिवामृतपूरिताभि-
र्लक्ष्मीस्वयंवरणमङ्गलदीपिकाभिः ।
सेवाभिरम्ब तव पादसरोजमूले
नाकारि किं मनसि भाग्यवतां जनानाम् ॥ १ ॥
கல்யாண வ்ரு’ஷ்டிபி⁴ரிவாம்ரு’த பூரிதாபிர்
லக்ஷ்மீ ஸ்வயம்’வரண மங்க³ள தீ³பிகாபி⁴: |
ஸேவாபி⁴ரம்ப³ தவ பாத³ஸரோஜமூலே
நாகாரி கிம்’ மனஸி பா⁴க்³யவதாம்’ ஜனானாம் ||1||

अमृतपूरिताभिः {அம்ரு’தபூரிதாபி⁴:} = அம்ருதத்தால் நிரப்பப்பட்ட; कल्याणवृष्टिभिरिव {கல்யாணவ்ரு’ஷ்டிபி⁴ரிவ} = மங்களமாரி போன்றதும்; लक्ष्मीस्वयंवरणमङ्गलदीपिकाभिः {லக்ஷ்மீஸ்வயம்’வரணமங்க³லதீ³பிகாபி⁴:} = லக்ஷ்மீதேவி தானே வரிக்கின்ற மங்கள தீபமாக விளங்குவதுமான; तव {தவ} = உன்னுடைய; पादसरोजमूले {பாத³ஸரோஜமூலே} = தாமரை போன்ற காலடியில்; सेवाभिः {ஸேவாபி⁴:} = செய்யும் பணிவிடைகளால்; अम्ब {அம்ப³} = தாயே; भाग्यवतां {பா⁴க்³யவதாம்’} = பாக்யங்களுடன் கூடிய; जनानाम् {ஜனானாம்} = ஜனங்களுடைய; मनसि {மனஸி} = மனதில், किं नाकारि {கிம்’ நாகாரி} = எதுதான் செய்யப்படவில்லை ?

முற்பிறவிகளில் ஏராளமான புண்யம் செய்தவர்களுக்குத் தான் அம்பிகையின் திருவடிகளில் ஸேவை செய்யும் பாக்யம் கிடைக்கும் அவர்களே அதிருஷ்டமுள்ளவர்கள். அமிருதம் நிறைந்து மங்களங்களையே பொழியும் மேகம் போன்றது தேவியின் திருவடி ஸேவை. லக்ஷ்மீ தானே ஸாந்நித்யம் கொள்ளும்

மங்கள தீபம் போன்றது இந்த பாதஸேவை பக்தர்களுக்கு எதைத்தான் தராது? லக்ஷ்மீகடாக்ஷம், திவ்யாமிருதம், மங்கள பரம்பரை, திவ்யஞானம் மற்றும் வேண்டியதையெல்லாம் இந்த சரண ஸேவையின் மூலம் பெறலாம். (1)

(அ) பக்தியின் லக்ஷணத்தைக் காட்டுகிறார்:-

एतावदेव जननि स्पृहणीयमास्ते
त्वद्वन्दनेषु सलिलस्थगिते च नेत्रे ।
सांनिध्यमुद्य दरुणायुतसोदरस्य
त्वद्विग्रहस्य परया सुधया प्लुतस्य ॥ २ ॥
ஏதாவதே³வ ஜனனி ஸ்ப்ரு'ஹணீயமாஸ்தே
த்வத்³வந்த³னேஷு ஸலில ஸ்த²கி³தே ச நேத்ரே |
ஸாம்'நித்⁴யமுத்³ய த³ருணாயுத ஸோத³ரஸ்ய
த்வத்³விக்³ரஹஸ்ய பரயா ஸுத⁴யா ப்லுதஸ்ய ||**2**||

जननि {ஜனனி} = தாயே; उद्यदरुणायुतसोदस्य {உத்³யத³ருணாயுதஸோத³ஸ்ய} = பதினாயிரம் உதயகால ஸூர்யர்களுக்கு ஒப்பானதும்; परया {பரயா} = சிறந்த; सुधया {ஸுத⁴யா} = அமிருதத்தால்; आप्लुतस्य {ஆப்லுதஸ்ய} = நீராட்டப்பட்டதுமான; त्वद्विग्रहस्य {த்வத்³விக்³ரஹஸ்ய} = உன் சரீரத்தின்; सान्निध्यं {ஸாந்நித்⁴யம்'} = ஸாந்நித்யமும் (அருகில் விளங்குவதும்); त्वद्वन्दनेषु {த்வத்³வந்த³னேஷு} = உன்னைக் குறித்து நமஸ்காரங்களில்; सलिलस्थगिते {ஸலிலஸ்த²கி³தே} = நீர்மல்கும் ஸ்தப்தமான; नेत्रे च {நேத்ரே ச} = கண்களும்; एतावदेव {ஏதாவதே³வ} = இது தான்; स्पृहणीयं {ஸ்ப்ரு'ஹணீயம்} = ஆசைப்படத் தகுந்ததாக; आस्ते {ஆஸ்தே} = இருக்கிறது.

உலகிலுள்ள ஜனங்கள் அறியாமையால் எதை எதையோ விரும்புகிறார்கள். அவைகளால் யாது பயன்? ஆயிரக்கணக்கான உதய சூரியர்கள் போன்று செந்நிறம் கொண்டதும் சிறந்த அமிருதத்தில் மூழ்கியதும் அமிருதம் பெருகுவதுமான உன் திவ்ய மூர்த்தியின் ஸாந்நித்யமும் உன்னை தர்சித்து வணங்கும்பொழுது கண்களில் ஆனந்தகண்ணீர் பெருக அசையாமல் உன் திவ்ய மங்கள மூர்த்தியிலேயே ஈடுபட்டிருக்கும் நிலையும் தான் யாவராலும் விரும்பி வேண்டத்தக்கது. உன் ஸந்நிதியில் அமர்ந்து நேத்ரங்களில் ஆனந்தபாஷ்பம் பெருகவேறொன்றையும் பாராமல் உன்னையே தர்சித்துக்கொண்டும் வணங்கிக்கொண்டும் நான் இருக்க வேண்டும். இதையே எனக்கு அருள்வாயாக, இங்கு 'परया' என்ற அடைமொழியால் தேவாமிருதத்தை விலக்கி அதைவிட எவ்வளவோ சிறப்பு வாய்ந்தது என்பதை காட்டுகிறார். அந்த அமிருகத்தைப்பருகியும் தேவர்கள் துன்பப்பட்டுக்கொண்டு தானே இருக்கிறார்கள்! (2)

(அ) ப்ரணாமத்தின் மஹிமையைக் கூறுகிறார்:-

ईशत्वनामकलुषाः कति वा न सन्ति
ब्रह्मादयः प्रतिभवं प्रलयाभिभूताः ।

एकः स एव जननि स्थिरसिद्धिरास्ते
यः पादयोस्तव सकृत्प्रणतिं करोति ॥ ३ ॥
ஈஶத்வ நாம கலுஷா: கதி வா ந ஸந்தி
ப்³ரஹ்மாத³ய: ப்ரதிப⁴வம்' ப்ரலயாபி⁴பூ⁴தா: |
ஏக: ஸ ஏவ ஜனனி ஸ்தி²ரஸித்³தி⁴ராஸ்தே
ய: பாத³யோஸ்தவ ஸக்ரு'த் ப்ரணதிம்' கரோதி ||3||

प्रतिभवं {ப்ரதிப⁴வம்'} = ஸிருஷ்டிதோறும்; प्रलयाभिभूताः {ப்ரலயாபி⁴பூ⁴தா:} = அழிவால் தாக்கப்பட்ட; ईशत्वनामकलुषाः {ஈஶத்வநாமகலுஷா:} = ஈசத்தன்மையில் பெயரளவிலேயே கலக்கமுள்ள; ब्रह्मादयः {ப்³ரஹ்மாத³ய:} = ப்ரஹ்மா முதலானவர்கள்; कति वा न सन्ति {கதி வா ந ஸந்தி} = எத்தனை பேர் தான் இல்லை; जननि {ஜனனி} = தாயே; यः {ய:} = எவன்; तव {தவ} = உன்னுடைய; पादयोः {பாத³யோ:} = இரு திருவடிகளிலும்; सकृत् {ஸக்ரு'த்} = ஒரு தடவை; प्रणतिं {ப்ரணதிம்'} = நமஸ்காரத்தை; करोति {கரோதி} = செய்கிறானோ; स एक एव {ஸ ஏக ஏவ} = அவன் ஒருவன் தான்; स्थिरसिद्धिः {ஸ்தி²ரஸித்³தி⁴:} = நிலையான ஸித்திபெற்றவனாக; आस्ते = இருக்கிறான்.

ப்ரஹ்மாதிகளெல்லாம் உலகிற்கு ஈசர்கள். அடக்கி ஆள்பவர்கள். இவ்வாறே தங்களை ஈசர்களாக எண்ணிக் கொண்டு தன் நிலை மறந்து மனம் கலங்கி நிற்கின்றனர். ஆனால் நன்கு கவனித்துப்பார்த்தால் ஈசர் என்பது அவர்களுக்குப் பெயாளவில்தான். ஏனெனில் அவர்களும் மஹாபிரளயத்தில் அழிந்துவிடுகின். இவ்விதமான ப்ரஹ்மா ஒருவரா? இருவரா? எத்தளையோ கணக்கிலடங்காத பிரஹ்மாதிகள் பிறந்து அழிந்துவிட்டனர். ஒவ்வொரு ஸிருஷ்டியிலும் வெவ்வேறான பிரஹ்மாதிகள் தோன்றி மறைந்து விடுகின்றனர். இவ்வித பிரஹ்மாதிகளை ஆச்ரயித்தால் நமக்கு சாச்வத நிலை எப்படி ஏற்படும்? ஜகன்மாதாவான பரதேவதையின் திருவடிகளில் பக்தியுடன் ஒரு தடவையாவது வணங்குபவன் தான் அவள் அருளால் அழியாத நிலையான ஸ்தானத்தைப் பெறுகிறான். (3)

(அ) கடாக்ஷத்தின் சிறப்பைச் சொல்கிறார்:-

लब्ध्वा सकृत्त्रिपुरसुन्दरि तावकीनं
कारुण्यकन्दलितकान्तिभरं कटाक्षम् ।
कंदर्पकोटिसुभगास्त्वयि भक्तिभाजः
संमोहयन्ति तरुणीर्भुवनत्रयेऽपि ॥ ४ ॥
லப்³த்⁴வா ஸக்ரு'த் த்ரிபுரஸுந்த³ரி தாவகீனம்'
காருண்ய கந்த³ளித காந்தி ப⁴ரம்' கடாக்ஷம் |
கந்த³ர்ப கோடி ஸுப⁴கா³ஸ் த்வயி ப⁴க்திபா⁴ஜ:
ஸம்'மோஹயந்தி தருணீர் பு⁴வனத்ரயே(அ)பி ||4||

त्रिपुरसुन्दरि {த்ரிபுரஸுந்த³ரி} = ஹே த்ரிபுரஸுந்தரி; त्वयि {த்வயி} = உன்னிடத்தில்; भक्तिभाजः {ப⁴க்திபா⁴ஜ:} = பக்தி பெற்றவர்கள்; कारुण्यकन्दलित {காருண்யகந்த³லித} = கருணை என்னும் முளை கிளம்பிய; कान्तिभरं {காந்திப⁴ரம்} = ஒளி நிறைந்த; तावकीनं {தாவகீனம்} = உன்னுடைய; कटाक्षम् {கடாக்ஷம்} = கடைக்கண் பார்வையை; सकृत् {ஸக்ரு'த்} = ஒரு தடவை; लब्ध्वा {லப்³த்⁴வா} = பெற்று; कंदर्पकोटिसुभगा:

{கந்த³ர்பகோடிஸுப‘கா³:} = கோடி மன்மதர்கள்போல் அழகுள்ளவர்களாக; भुवनत्रयेऽपि {பு‘வனத்ரயே(அ)பி} = மூவ்வுலகிலும்; तरुणी: {தருணீ:} = யுவதிகளை; संमोहयन्ति {ஸம்’மோஹயந்தி} = மயங்கச் செய்கிறார்கள்.

ஹே த்ரிபுரஸுந்தரி ! ஒரு தடவையாவது கருணையொளி நிறைந்த உன் திவ்ய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகும் பக்தர்கள் கோடி மன்மதாகாரர்களாக ஆகி திவ்ய லாவண்யம் பெற்று மூவுலகிலுமுள்ள திவ்ய ஸௌந்தர்யம் கொண்ட யுவதிகளை மயங்கச் செய்கிறார்கள். உலகிலேயே சிறந்த அழகு வாய்ந்த தேவஸ்திரீகளும் கூட உன் பக்தனின் ஸௌந்தர்யத்தில் மயங்குகின்றனர். அம்பிகையின் அருளால் திவ்ய ஸௌந்தர்யம் பெறலாம். இதே கருத்தை ஸௌந்தர்யலஹரி 13வது சுலோகத்திலும் காணலாம். "விஷ்ணு மோஹிநி உருக்கொண்டு காமாரியை மயங்கச்செய்ததும் காமன் முனிவர்களின் மனதில் மோஹத்தை உண்டுபண்ணுவதும் உன் பூஜா பலன்தான்" என்று 5வது சுலோகத்தில் கூறியுள்ளார். (4)

(அ) தேவியின் ஸ்மரணம் யமபயத்தைப்போக்குமென்கிறார்:-

ह्रींकारमेव तव नाम गृणन्ति वेदा
मातस्त्रिकोणनिलये त्रिपुरे त्रिनेत्रे ।
त्वत्संस्मृतौ यमभटाभिभवं विहाय
दीव्यन्ति नन्दनवने सह लोकपालैः ॥ ५ ॥
ஹ்ரீங்காரமேவ தவ நாம க்³ரு’ணந்தி வேதா³
மாதஸ்த்ரிகோண நிலயே த்ரிபுரே த்ரிநேத்ரே |
த்வத்ஸம்’ஸ்ம்ரு’தௌ யமப‘டாபி‘ப‘வம்’ விஹாய
தீ³வ்யந்தி நந்த³னவனே ஸஹ லோகபாலை: ||5||

त्रिकोणनिलये {த்ரிகோணநிலயே} = முக்கோணத்தை இருப்பிடமாகக்கொண்ட; मात: {மாத:} = தாயே!; त्रिपुरे {த்ரிபுரே} = த்ரிபுரஸுந்தரி; त्रिनेत्रे {த்ரிநேத்ரே} = மூன்று கண்களுள்ளவளே; तव नाम {தவ நாம} = உனது பெயரான; ह्रींकारमेव {ஹ்ரீங்காரமேவ} = ஹ்ரீங்காரத்தையே; वेदा: {வேதா³:} = வேதங்கள்; गृणन्ति {க்³ரு’ணந்தி} = போற்றுகின்றன; त्वत्संस्मृतौ {த்வத்ஸம்’ஸ்ம்ரு’தௌ} = உன் ஸ்மரணம் ஏற்பட்டதும் (பக்தர்கள்); यमभटाभिभवं {யமப‘டாபி‘ப‘வம்’} = யமகிங்கரர்களின் அவமதிப்பை; विहाय {விஹாய} = விலக்கி; लोकपालै सह {லோகபாலை ஸஹ} = திக்பலகர்களுடன்; नन्दनवने {நந்த³னவனே} = நந்தன வனத்தில்; दीव्यन्ति {தீ³வ்யந்தி} = விளையாடுகின்றனர்.

அம்பிகை த்ரிகோணத்தில் வஸிக்கிறாள். த்ரிகோணத்திலுள்ள பிந்து ஸ்தானத்தில் வஸிப்பவள் என்று பொருள். ஸ்ரீசக்ரத்திலுள்ள எல்லாமே முக்கோணவடிவமாக இருப்பதால் ஸ்ரீ சக்ரநிவாஸினி என்றும் பொருள் கொள்ளலாம். மும்மூர்த்திகளுக்கும் ஆதியாக, ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு முன்னால் இருப்பதாலும், உலகில் மும்மூன்றாக விளங்கும் பொருள்களில் எல்லாம் வியாபித்திருப்பகாலும் த்ரிபுரா என்று பெயர். மூன்று கண்களுள்ளவள். அம்பிகையின் மந்திரங்களில் மிக முக்யமான 'ஹ்ரீம் ' என்பதையே அவள் பெயாராகக்கூறி உபநிஷத்துக்கள் போற்றுகின்றன. அம்பிகையை ஸ்மரிப்பவர்களின் அருகில் யம கிங்கரர்கள் நெருங்கவேமாட்டார்கள். உத்தமமான

தேவ பாவத்தையடைந்து இந்திரன் முதலான திக்பாலர்களுக்குச் சமமான பெருமைகளைப்பெற்று தேவலோகத்திலுள்ள நந்தனம் என்னும் உத்யான வனத்தில் அவர்களுடன் விளையாடுகிறார்கள்.

हन्तुः पुरामधिगलं परिपीयमानः
क्रूरः कथं न भविता गरलस्य वेगः ।
नाश्वासनाय यदि मातरिदं तवार्धं
देहस्य शश्वदमृताप्लुत शीतलस्य ॥ ६ ॥
ஹந்து: புராமதி⁴க³லம்’ பரிபீயமான:
க்ரூர: கத²ம்’ ந ப⁴விதா க³ரளஸ்ய வேக³: |
நாஶ்வாஸனாய யதி³ மாதரித³ம்’ தவார்த⁴ம்’
தே³ஹஸ்ய ஶஶ்வத³ம்ரு’தாப்லுத ஶீதலஸ்ய || **6** ||

मातः {மாத:} = தாயே; तव {தவ}= உன்னுடைய; शश्वत् {ஶஶ்வத்} = எப்பொழுதும்; अमृताप्लुत {அம்ரு’தாப்லுத} = அமிருதத்தால் நனைந்து; शीतलस्य {ஶீதலஸ்ய} = குளிர்ச்சியடைந்த; देहस्य {தே³ஹஸ்ய} = சரீரத்தில்; इदं अर्धं {இத³ம்’ அர்த⁴ம்’} = இந்தப் பாதியானது; आश्वासनाय {ஆஶ்வாஸனாய} = ஆறுதல் செய்வதற்கு; यदि न {யதி³ ந} = இல்லாவிடில், पुरां हन्तुः {புராம்’ ஹந்து:} = த்ரிபுரர்களைக் கொன்ற பரமசிவனின்; अधिगलं {அதி⁴க³லம்’} = கழுத்தில்; परिपीयमानः {பரிபீயமான:} = பானம் செய்யப்படுகிற; गरलस्य {க³ரலஸ்ய} = விஷத்தின்; वेगः {வேக³:} = வேகம்; क्रूरः {க்ரூர:} = க்ரூரமாக; कथं {கத²ம்’} = எப்படி; न भविता {ந ப⁴விதா} = இல்லாமலிருக்கும்.

தேவர்கள் அமிருகத்திற்காக பாற்கடலைக் கடையும்பொழுது முதலில் உண்டான ஹாலாஹல விஷத்தை, உலகைக்காப்பாற்ற திரிபுராரியான பரமசிவன் பானம் செய்து தன் கழுத்திலேயே நிறுத்தி வைத்துக்கொண்டார். உலகம் முழுவதையும் சாம்பலாக்கும் சக்தி படைத்த அந்தக்கொடிய விஷத்தின் வேகம் எவ்வாறு அடங்கியது ? பரமசிவனின் சரீரத்தை ஏன் சாம்பலாக செய்யவில்லை? தாயே ! இதற்குக் காரணம் நீதான். உன் சரீரம் எப்பொழுதும் அமிருதத்தில் மூழ்கிக் குளிர்ந்திருப்பது அர்த்த நாரீச்வர மூர்த்தியில் பரமசிவனது பாதி சரீரமாக நீ இருக்கிறாய். அமிருத ஸம்பந்தமுள்ள உனது பாதி சரீரம் தான் விஷ வேகத்தைத்தடுத்து பரமசிவனுக்கு துன்பமொன்றும் ஏற்படாமல் செய்தது. இது இல்லாவிட்டால் விஷவேகத்தை யார்தான் தடுத்திருக்கமுடியும்? முன் சுலோகத்தில் யமகிங்கர பயம் நீங்கும் என்று கூறினார். இது ஆச்சர்யமல்ல. யமனை நிக்ரஹம் செய்த கால காலனுக்கு ஹாலாஹல விஷபயத்தை நீக்கினாள் தேவி. என்று இங்கு கூறப்படுகிறது. (6)

सर्वज्ञतां सदसि वाक्पटुतां प्रसूते
देवि त्वदङ्घ्रिसरसीरुहयोः प्रणामः ।
किं च स्फुरन्मकुटमुज्ज्वलमातपत्रं
द्वे चामरे च महतीं वसुधां ददाति ॥ ७ ॥
ஸர்வஜ்ஞதாம்’ ஸத³ஸி வாக்படுதாம்’ ப்ரஸூதே
தே³வி த்வத³ங்க்⁴ரிஸரஸீருஹயோ: ப்ரணாம: .

கிம்’ ச ஸ்பு²ரன்மகுட முஜ்ஜ்வலமாதபத்ரம்’
த்³வே சாமரே ச மஹதீம்’ வஸுதா⁴ம்’ த³தா³தி || 7 ||

देवि {தே³வி} = ஹே தேவி; त्वदङ्घ्रिसरसीरुहयोः {த்வத³ங்க்⁴ரிஸரஸீருஹயோ:} = உமது இரு தாமரைத் திருவடிகளில்; प्रणामः {ப்ரணாம:} = நமஸ்காரமானது; सर्वज्ञतां {ஸர்வஜ்ஞதாம்’} = எல்லாம் அறியும் தன்மையையும்; सदसि {ஸத³ஸி} = ஸபையில்; वाक्पटुतां {வாக்படுதாம்’} = பேச்சுத்திறமையையும்; प्रसूते {ப்ரஸூதே} = உண்டுபண்ணுகிறது; किं च {கிம்’ ச} = மேலும்; स्फुरन्मकुटं {ஸ்பு²ரன்மகுடம்’} = பிரகாசிக்கிற கிரீடத்தையும்; उज्ज्वलं {உஜ்ஜ்வலம்’} = ஒளியுள்ள; आतपत्रं {ஆதபத்ரம்’} = வெண் குடையையும்; द्वे चामरे {த்³வே சாமரே} = இரு சாமரங்களையும்; महतीं {மஹதீம்’} = விஸ்தீர்ணமான; वसुधां च {வஸுதா⁴ம்’ ச} = பூமியையும்; ददाति {த³தா³தி} = கொடுக்கிறது.

உன் திருவடித்தாமரையில் வணங்குபவர்கள் உனது அருளால் ஸர்வக்ஞர்களாக (எல்லாம் அறிந்தவர்களாக) ஆகிவிடுகின்றனர் எந்த ஸபையிலும் நன்றாகப் பேசும் திறமை அவர்களுக்கு ஏற்படுகிறது இது மட்டுமா ? உனது பக்தர்கள் சக்ரவர்த்தி ஸ்தானம் பெற்று கிரீடமணிந்து சக்ர சாமராத்யுபசாரங்களுடன் விஸ்தீர்ணமான பூமண்டலம் முழுவதையும் அரசாளுகின்றனர்.(7)

कल्पद्रुमैरभिमतप्रतिपादनेषु
कारुण्यवारिधिभिरम्ब भवत्कटाक्षैः ।
आलोकय त्रिपुरसुन्दरि मामनाथं
त्वय्येव भक्तिभरितं त्वयि बद्धतृष्णम् || ८ ||
கல்பத்³ருமைரபி⁴மதப்ரதிபாத³னேஷு
காருண்யவாரிதி⁴பி⁴ரம்ப³ ப⁴வத்கடாக்ஷை: |
ஆலோகய த்ரிபுரஸுந்த³ரி மாமநாத²ம்’
த்வய்யேவ ப⁴க்திப⁴ரிதம்’ த்வயி ப³த்³த⁴த்ரு’ஷ்ணம் || 8 ||

अभिमतप्रतिपादनेषु {அபி⁴மதப்ரதிபாத³னேஷு} = விரும்பியவைகளை எல்லாம் கொடுக்கும் விஷயத்தில்; कल्पद्रुमैः {கல்பத்³ருமை:} = கல்பகவிருக்ஷமாயுள்ளதும்; कारुण्यवारिधिभिः {காருண்யவாரிதி⁴பி⁴:} = கருணைக் கடல்களாகவுமுள்ள; भवत्कटाक्षैः {ப⁴வத்கடாக்ஷை:} = உன்னுடைய கடாக்ஷங்களால்; अम्ब {அம்ப³} = தாயே!; त्रिपुरसुन्दरि {த்ரிபுரஸுந்த³ரி} = ஹே த்ரிபுரஸுந்தரி ! ; अनाथं {அநாத²ம்} = ரக்ஷகனில்லாதவனும்; त्वय्येव {த்வய்யேவ} = உன்னிடத்திலேயே; भक्तिभरितं {ப⁴க்திப⁴ரிதம்} = பக்தி நிறைந்தவனும்; त्वयि {த்வயி} = உன்னிடம்; बद्धतृष्णम् {ப³த்³த⁴த்ரு’ஷ்ணம்} = ஆவல்கொண்டவனுமான; मां {மாம்} = என்னை; आलोकय {ஆலோகய} = பார்ப்பாயாக.

உலகில் அவரவர் வேண்டுவதையெல்லாம் தருவது தேவ லோகத்திலுள்ள கல்பவிருக்ஷம். இதுபோல் உனது கடாக்ஷமும் அபீஷ்டங்களையெல்லாம் நிறைவேற்றுகிறது. இக்கடாக்ஷம் கடல்போல வற்றாத அளவற்ற கருணாரஸம் நிரம்பியது அதனால் துன்பங்களையெல்லாம் போக்கி விடுகிறது. உன் விஷயமான பக்தியே என் மனதில் நிறைந்திருக்கிறது. வேறு ஒன்றிலும் ஆசைகொள்ளாது உன் அருளைப் பெறுவதிலேயே மாறாத தீவ்ரமான ஆவல் கொண்டுள்ளேன். நான் அனாதன். என்னைக் காப்பாற்ற உன்னைத்தவிர வேறு ஒருவரும் இல்லை. என்

பேரில் உனது கருணாகடாக்ஷத்தைச் செலுத்திக் காப்பாற்றவேணும், பூவுலகிலுள்ள மனிதன் தேவலோகத்திலுள்ள கல்பகவிருக்ஷத்திடமிருந்து அபீஷ்டத்தைப் பெறமுடியாது. ஸத்கர்மாக்களைச் செய்து மறுபிறவியில் தேவலோகத்தில் தேவப்பிறவி கிடைத்தால் தான் கல்பகவிருக்ஷத்தையண்டி அபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆனால் மனிதப்பிறவியிலேயே பக்தி கொண்டால் அம்பிகையின் கருணாகடாக்ஷத்திற்குப் பாத்ரமாகி அபீஷ்டங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். கல்பதருவை விடச் சிறந்தது உன் கருணாகடாக்ஷம். (8)

हन्तेतरेष्वपि मनांसि निधाय चान्ये
भक्तिं वहन्ति किल पामरदैवतेषु ।
त्वामेव देवि मनमा समनुस्मगमि
त्वामेव नौमि शरणं जननि त्वमेव ॥ ९ ॥
ஹந்தேதரேஷ்வபி மனாம்'ஸி நிதா⁴ய சான்யே
ப⁴க்திம்' வஹந்தி கில பாமரதை³வதேஷு |
த்வாமேவ தே³வி மனமா ஸமனுஸ்மக³மி
த்வாமேவ நௌமி ஶரணம்' ஜனனி த்வமேவ || **9** ||

अन्ये {அன்யே} = வேறு சிலர்; इतरेषु {இதரேஷு} = மற்ற; पामरदैवतेष्वपि {பாமரதை³வதேஷ்வபி} = பாமர தேவதைகளிடத்திலும்; मनांसि {மனாம்'ஸி} = மனதுகளை; निधाय {நிதா⁴ய} = வைத்து; भक्तिं वहन्ति {ப⁴க்திம்' வஹந்தி} = பக்தி புரிகிறார்களல்லவா; हन्त {ஹந்த} = ஐயோ கஷ்டம் !; देवि {தே³வி} = ஹே தேவி! मनसा {மனஸா} = மனதால்; त्वामेव {த்வாமேவ} = உன்னையே; समनुस्मरामि {ஸமனுஸ்மராமி} = (நான்) நன்கு ஸ்மரிக்கிறேன்; त्वामेव {த்வாமேவ} = உன்னையே; नौमि {நௌமி} = வணங்குகிறேன்; जननि {ஜனனி} = தாயே; त्वमेव {த்வமேவ} = நீதான்; शरणं {ஶரணம்'} = ரக்ஷிப்பவள்.

தேவியின் தத்வத்தையறிந்துகொள்ளாது நம்மைப்போலவே உலக விஷய இன்பங்களில் மூழ்கிக்கிடக்கும் பாமர தேவதைகளிடம் மனதைச் செலுத்தி சிலர் பக்தி புரிகின்றனர். ஐயோ கஷ்டம்! இவர்களின் அறியாமையைப் பற்றி என்ன சொல்வது? அழிவற்ற பேரானந்தத்தை இவர்களிடமிருந்து பெறமுடியுமா? நான் அவர்கள் வழியில் செல்லவில்லை. உன்னையே மனதால் நன்றாக ஸ்மரிக்கிறேன். உன்னையே வணங்குகிறேன். தாயாரான நீதான் எனக்கு சரணம், வேறு கதியில்லை. (9)

लक्ष्येषु सत्स्वपि कटाक्षनिरीक्षणाना-
मालोकय त्रिपुरसुन्दरि मां कदाचित् ।
नूनं मया तु सदृशः करुणैकपात्रं
जातो जनिष्यति जनो न च जायते वा ॥ १० ॥
லக்ஷ்யேஷு ஸத்ஸ்வபி கடாக்ஷநிரீக்ஷணானா-
மாலோகய த்ரிபுரஸுந்த³ரி மாம்' கதா³சித் |
நூனம்' மயா து ஸத்³ரு'ஶ: கருணைக பாத்ரம்'

ஜாதோ ஜநிஷ்யதி ஜனோ ந ச ஜாயதே வா || 10 ||

त्रिपुरसुन्दरि {த்ரிபுரஸுந்த³ரி} = ஹே த்ரிபுரஸுந்தரி; कटाक्षनिरीक्षणाना {கடாக்ஷநிரீக்ஷணானா} = கடைக்கண் பார்வைகளுக்கு; लक्ष्येषु {லக்ஷ்யேஷு} = இலக்காகத்தக்கவர் பலர்; सत्स्वपि {ஸத்ஸ்வபி} = இருந்தபோதிலும்; कदाचित् {கதா³சித்} = ஒரு சமயமாவது; मां {மாம்'} = என்னை; आलोकय {ஆலோகய} = பார்ப்பாயாக; करुणैकपात्रं {கருணைகபாத்ரம்'} = உன் கருணைக்கு மிகவும் தகுதியான; जनः {ஜன:} = மனிதர்; मया तु सदृशः {மயா து ஸத்³ரு'ஶ:} = எனக்கு ஒப்பாக; न जातः {ந ஜாத:} = பிறந்ததில்லை; न जनिष्यति {ந ஜநிஷ்யதி} = பிறக்கப்போவதுமில்லை; न च जायते वा {ந ச ஜாயதே வா} = பிறக்கிறதுமில்லை, नूनं {நூனம்'}= நிச்சயம்.

ஹே த்ரிபுரஸுந்தரி ! உனது கடைக்கண் பார்வை தன் மேல் விழுவதற்கு வேண்டிய பாக்யமுள்ளவர்கள் உலகில் ஏராளமாக இருக்கின்றனர். அந்தத் தகுதி என்னிடம் இல்லைதான். ஆனாலும் ஏதாவது ஒரு சமயம் என்னையும் கடாக்ஷித்தருள வேணும். ஏனெனில் உனது கருணைக்கு முக்ய பாத்ரமாகத் தக்கவர் என்னைப்போல ஒருவரும் உலகில் இதுவரை இருந்ததில்லை. இப்பொழுதும் இல்லை. இனி வருங்காலத்திலும் பிறக்கப்போவதில்லை. துன்பப்படுபவர்களிடம்தான் கருணையைச் செலுத்தவேண்டும். கருணைக்குப் பாத்திரமாகத் தக்கவர்கள் அவர்கள் தான். என்னைப்போல துன்பப்படுபவர் உலகில் முக்காலங்களிலும் வேறு ஒருவரும் கிடையாது. (10)

ह्रींह्रीमिति प्रतिदिनं जपतां तवाख्यां
किं नाम दुर्लभमिह त्रिपुराधिवासे ।
मालाकिरीटमदवारणमाननीयान्
तान्सेवते वसुमती स्वयमेव लक्ष्मीः ॥ ११ ॥
ஹ்ரீம்'ஹ்ரீமிதி ப்ரதிதி³னம்' ஜபதாம்' தவாக்²யாம்'
கிம்' நாம து³ர்லப⁴மிஹ த்ரிபுராதி⁴வாஸே |
மாலா கிரீட மத³வாரண மானனீயான்
தான் ஸேவதே வஸுமதீ ஸ்வயமேவ லக்ஷ்மீ: ||11 ||

त्रिपुराधिवासे {த்ரிபுராதி⁴வாஸே} = த்ரிபுரங்களில் வஸிப்பவளே; ह्रीं ह्रीमिति {ஹ்ரீம்' ஹ்ரீமிதி} = ஹ்ரீம் ஹ்ரீம் என்று; तव आख्यां {தவ ஆக்²யாம்'} = உன்னுடைய பெயரை; प्रतिदिनं {ப்ரதிதி³னம்'} = தினந் தோறும்; जपतां {ஜபதாம்'} = ஜபிக்கிறவர்களுக்கு; इह {இஹ} = இங்கு; दुर्लभं {து³ர்லப⁴ம்'} = அடைய முடியாதது; किं नाम {கிம்' நாம} = என்ன தான் உள்ளது ?; मालाकिरीटमदवारणमाननीयान् {மாலாகிரீடமத³வாரணமானனீயான்} = மாலைகள், மகுடம், மத்தகஜம் இவைகளால் கௌரவிக்கத்தக்க; तान् {தான்} = அவர்களை; वसुमती {வஸுமதீ} = பூமி; सेवते {ஸேவத்தே} = ஸேவிக்கிறாள்; लक्ष्मीः {லக்ஷ்மீ:} = லக்ஷ்மீதேவியும்; स्वयमेव {ஸ்வயமேவ} = தானாகவே ஸேவிக்கிறாள்.

அம்பிகையின் பீஜாக்ஷரமான 'ஹ்ரீம்' என்ற மந்திரத்தை ஜபிப்பவர்கள் ஆசைப்பட்டால் எந்தப்பொருளையும் அடைந்து விடலாம். அவர்களுக்குக் கிடைக்காதது உலகில் ஒன்றுமே இல்லை. ஸ்ரீ தேவியும் பூதேவியும் தானாகவே அவனை ஸேவிக்கிறார்கள். பூமண்டலம் முழுவதற்கும் ஏகசக்ராதிபதியாக

அவளை ஆக்கிவிடுகிறாள் பூதேவி. மாலைகள் மகுடம் மத்தகஜம் முதலான மஹாராஜ சிஹ்னங்களையெல்லாம் அருளி ஸ்ரீதேவி எல்லா ஸம்பத் துக்களையும் தந்து அருள்கிறாள். (11)

संपत्कराणि सकलेन्द्रियनन्दनानि
साम्राज्यदाननिरतानि सरोरुहाक्षि ।
त्वद्वन्दनानि दुरिताहरणोद्यतानि
मामेव मातरनिशं कलयन्तु मान्ये ॥ १२ ॥
ஸம்பத்கராணி ஸகலேந்த்³ரிய நந்த³னானி
ஸாம்ராஜ்ய தா³னநிரதானி ஸரோருஹாக்ஷி |
த்வத்³வந்த³னானி து³ரிதாஹரணோத்³யதானி
மாமேவ மாதரநிஶம்’ கலயந்து மான்யே || **12** ||

सरोरुहाक्षि {ஸரோருஹாக்ஷி} = தாமரை மலர்போன்ற நேத்ரங்கள் உள்ளவளே ! संपत्कराणि {ஸம்பத்கராணி} = ஐசுவர்யங்களை உண்டுபண்ணுவதும்; सकलेन्द्रियनन्दनानि {ஸகலேந்த்³ரியநந்த³னானி} = எல்லாப் புலன்களையும் ஆனந்தப்படுத்துவதும்; साम्राज्यदाननिरतानि {ஸாம்ராஜ்யதா³னநிரதானி} = ஸாம்ராஜ்யத்தைத் தருவதில் ஈடுபட்டதும்; दुरिताहरणोद्यतानि {து³ரிதாஹரணோத்³யதானி} = பாபங்களைப் போக்குவதில் ஊக்கமுள்ளதுமான; त्वद्वन्दनानि {த்வத்³வந்த³னானி} = உன்னைக் குறித்த ப்ரணாமங்கள்; मान्ये {மான்யே} = பூஜிக்கத்தக்க; मातः {மாத:} = தாயே; अनिशं {அநிஶம்’} = எப்பொழுதும்; मामेव {மாமேவ} = என்னையே; फलयन्तु {ப²லயந்து} = செயல்படுத்தட்டும்.

தாமரை மலர்போல் அழகிய கண்களுள்ள ஜகன் மாதாவைக் குறித்து நமஸ்காரம் செய்பவர்களுக்கு எல்லா ஐசுவர்யங்களும் ஏற்படும். கண், காது, மூக்கு, நாக்கு, த்வக், மனம் என்ற எல்லா இந்திரியங்களுக்கும் சிறந்த ரூபம், சப்தம், மணம், ரஸம், ஸ்பர்சம் இவை கிடைத்து அவை திருப்தியை அடையும். சக்ரவர்த்தியாக ஆவான். எல்லா பாபங்களையும் போக்கிவிடும் பூஜிக்கத்தக்க தாயே! இவ்வளவு மஹிமையுள்ள நமஸ்காரங்களை உன்னைக் குறித்து நான் எப்பொழுதும் செய்துகொண்டிருக்கும்படி நீ அருளவேண்டும். (12)

कल्पोपसंहृतिषु कल्पितताण्डवस्य
देवस्य खण्डपरशोः परभैरवस्य ।
पाशाङ्कुशैक्षवशरासन पुष्पवाणा
सा साक्षिणी विजयते तव मूर्तिरेका || १३ ||
ல்போபஸம்’ஹ்ரு’திஷு கல்பித தாண்ட³வஸ்ய
தே³வஸ்ய க²ண்ட³பரஶோ: பரபை⁴ரவஸ்ய |
பாஶாங்குஶைக்ஷவ ஶராஸன புஷ்பவாணா
ஸா ஸாக்ஷிணீ விஜயதே தவ மூர்திரேகா || **13** ||

कल्पोपसंहृतिषु {கல்போபஸம்’ஹ்ரு’திஷு} = கல்பங்களின் முடிவுகளான ப்ரளயகாலங்களில்; कल्पितताण्डवस्य {கல்பிததாண்ட³வஸ்ய} = தாண்டவம் புரிகின்ற; देवस्य {தே³வஸ்ய} = தேவரான; खण्डपरशोः {க²ண்ட³பரஶோ:} = ஒடிந்த பரசு ஆயுதத்தை

உடைய; परभैरवस्य {பரபை⁴ரவஸ்ய} = பரபைரவருக்கு; तव {தவ} = உன்னுடைய; पाश अंकुश ऐक्षव शराशन पुष्पबाणा {பாஶ அங்குஶ ஐக்ஷவ ஶராஶன புஷ்பபா³ணா} = அங்குசம், கரும்புவில், புஷ்பபாணம் இவைகளை உடைய; सा {ஸா} =அந்த; एका मूर्तिः {ஏகா மூர்தி:} = ஒரு மூர்த்திதான்; साक्षिणी {ஸாக்ஷிணீ} = ஸாக்ஷியாக; विजयते {விஜயதே} = விளங்குகிறது.

உலக ஸிருஷ்டிகளெல்லாம் முடிந்து மஹாப்ரளய காலத்தில் பிரபஞ்சம் முழுவதையும் அழித்து பரமசிவன் பயங்கர மூர்த்தியாகத் தான் ஒருவனாகவே நின்றுகொண்டு மஹாதாண்டவம் செய்கிறார். அந்த சமயத்தில் வேறு ஒருவரும் இல்லை. எல்லாம் அழித்து விட்டது. ஆனாலும் அச்சமயத்திலும் வில், அம்பு, பாசம், அங்குசம் இந்த ஆயுதங்களை தரித்துக்கொண்டு நீ அந்த தாண்டவத்தைப் பார்த்துக்கொண்டு ஸாக்ஷியாக விளங்குகிறாய். மஹாப்ரளய காலத்தில் பரமசிவன் புரியும் மஹா தாண்டவத்தைப் பார்க்கும் சக்தி வேறு யாருக்கு உண்டு ? ஸச்சிதானந்த ரூபியான பரமாத்மா உன் சக்தியால்தான் பிரளயத்தையும் தாண்டவத்தையும் புரிகிறார். (13)

लग्नं सदा भवतु मातरिदं तवार्धं
तेजः परं बहुल कुङ्कुमपङ्कशोणम् ।
भास्वत्किरीटममृतांशुकलावतंसं
मध्येत्रिकोणनिलयं परमामृतार्द्रम् ॥ १४ ॥
லக்³னம்’ ஸதா³ ப⁴வது மாதரித³ம்’ தவார்த⁴ம்’
தேஜ: பரம்’ ப³ஹுள குங்கும பங்கஶோணம் |
பா⁴ஸ்வத் கிரீடமம்ரு’தாம்’ஶுகலாவதம்’ஸம்’
மத்⁴யேத்ரிகோணநிலயம்’ பரமாம்ரு’தார்த்³ரம் || **14** ||

मातः {மாத:} = தாயே; बहुल कुङ्कुमपङ्कशोणं {ப³ஹுள குங்குமபங்கஶோணம்’} = அதிகமான குங்குமச் சேற்றினால் செந்நிறமுள்ளதும்; भास्वत्किरीटं {பா⁴ஸ்வத்கிரீடம்’} = ஒளியுள்ள கிரீடமுள்ளதும்; अमृतांशुकलावतंसं {அம்ரு’தாம்’ஶுகலாவதம்’ஸம்’} = அமிருத கிரணனான சந்திரனை சிரோபூஷணமாகக் கொண்டதும்; मध्येत्रिकोणनिलयं {மத்⁴யேத்ரிகோணநிலயம்’} = த்ரிகோண சக்ரத்தின் நடுவில் உள்ளதும்; परमामृतार्द्रम् {பரமாம்ரு’தார்த்³ரம்} = சிறந்த அமிருதத்தால் நனைந்ததும்; परं तेजः {பரம்’ தேஜ:} = சிறந்த ஒளிமயமானதுமான; इदं {இத³ம்’} = இந்த; तव {தவ} = உன்னுடைய; अर्धं {அர்தே⁴} = ஸ்வரூபம்; सदा {ஸதா³} = எப்பொழுதும்; लग्नं {லக்³னம்’} = (மனதில்) பதிந்ததாக; भवतु {ப⁴வது} = இருக்கவேண்டும்.

அதிகமான குங்குமப்பூ கலந்த நீரால் (அல்லது குங்குமப்பூ நீர்போல்) செந்நிறம் கொண்டதும் சிரஸில் ஒளியுள்ள திவ்ய கிரீடமும் அதில் சந்திர கலையும் அணிந்துள்ளதும், திவ்யாமிருதத்தால் நனைந்ததும் த்ரிகோண சக்ரத்தில் அமர்ந்துள்ளதும் ஒளி மயமானதுமான உன் ஸ்வரூபம் என் மனதில் எப்பொழுதும் நிலைத் திருக்கவேண்டும். இந்த உன் ஸ்வரூபத்தை நான் எப்பொழுதும் தியானம் செய்து கொண்டிருக்கும் படி அருள்புரியவேண்டும்.(14)

ह्रींकारमेव तव नाम तदेव रूप

त्वन्नामसा दुर्लभमिह त्रिपुरे गृणन्ति ।
त्वत्तेज परिणतं वियदादिभूत
सौख्य तनोति सरसीरुह संभवादेः || १५ ||
ஹ்ரீங்காரமேவ தவ நாம ததே³வ ரூப
த்வந்நாம து³ர்லப⁴மிஹ த்ரிபுரே க்³ரு’ணந்தி |
த்வத்தேஜஸா பரிணதம்’ வியதா³தி³பூ⁴த
ஸௌக்²யம் தநோதி ஸரஸீருஹ ஸம்ப⁴வாதே³ঃ || 15 ||

त्रिपुरे {த்ரிபுரே} = ஹே த்ரிபுரஸுந்தரி; ह्रींकारमेव {ஹ்ரீங்காரமேவ} = ஹ்ரீங்காரத்தையே; तव नाम {தவ நாம} = உனது பெயராகவும்; तदेव {ததே³வ} = அதையே; रूपं {ரூபம்’} = ஸ்வரூபமாகவும்; गृणन्ति {க்³ரு’ணந்தி} = போற்றுகின்றனர்; इह {இஹ}= இங்கு; त्वन्नाम {த்வந்நாம} = உனது நாமா; दुर्लभम् {து³ர்லப⁴ம்} = கிடைத்தற்கரியது; त्वत्तेजसा {த்வத்தேஜஸா} = உன்னுடைய தேஜஸ்ஸால்; वियदादिभूतम् {வியதா³தி³பூ⁴தம்} = ஆகாசம் முதலான பூகங்கள்; परिणतं {பரிணதம்’} = பரிணாமத்தை அடைந்திருக்கிறது; सरसीरुह संभवादेः {ஸரஸீருஹ ஸம்ப⁴வாதே³ঃ} = தாமரையில் உண்டான பிரஹ்மா முதலியவருக்கு; सौख्यम् {ஸௌக்²யம்} = ஆனந்தத்தை; तनोति {தனோதி} = உண்டுபண்ணுகிறது.

பரமாத்மாவின் நாமாக்களுள் பிரணவத்தையே சிறந்ததாக உபநிஷத்துக்கள் கூறுகின்றன. ஹ்ரீங்காரம் தேவீப்ரணவ மானதால் தேவீ நாமாக்களுக்குள் இதுவே சிறந்தது. இதுமட்டுமல்ல. இதுவே அவளை தியானம் செய்வதற்கு ப்ரதீகமாகவும் உள்ளது. ஆகையால் ஹ்ரீங்காரமே அவளுடைய ஸ்வரூபம். தேவியின் சிறந்த நாமாவாகவும் ப்ரதீகமாகவும் உள்ள ஹ்ரீங்காரம் சுலபமாக யாருக்கும் கிடைக்காது. இவ்வாறு சாஸ்திரங்களும் பெரியோர்களும் ஹ்ரீங்காரத்தைப் போற்றுகின்றனர். உனது தேஜஸ்ஸால் இந்த ஹ்ரீங்காரத்திலிருந்துதான் ஆகாசம் முதலான ஸமஸ்த பிரபஞ்சமும் உண்டாகியிருக்கிறது. இதுவே பிரஹ்மா முதலானவர்களுக்கும் பேரானந்தத்தைத் தருகிறது. (15)

ह्रींकारत्त्रयसंपुटेन महता मन्त्रेण संदीपितं
स्तोत्र यः प्रतिवासरं तव पुरो मातर्जपेन्मन्त्रवित् ।
तस्य क्षोणिभुजो भवन्ति वशगा लक्ष्मीश्चिरस्थायिनी
वाणी निर्मलसूक्तिभारभरिता जागर्ति दीर्घं वयः ।।
ஹ்ரீங்கார த்த்ரய ஸம்புடேன மஹதா மந்த்ரேண ஸந்தீ³பிதம்’
ஸ்தோத்ர யঃ ப்ரதிவாஸரம்’ தவ புரோ மாதர் ஜபேன்மந்த்ரவித் |
தஸ்ய க்ஷோணிபு⁴ஜோ ப⁴வந்தி வஶகா³ லக்ஷ்மீஶ்சிரஸ்தா²யினீ
வாணீ நிர்மல ஸூக்திபா⁴ரப⁴ரிதா ஜாக³ர்த்தி தீ³ர்க்க⁴ம்’ வயঃ ||

मातः {மாதঃ} = தாயே; मन्त्रवित् {மந்த்ரவித்} = மந்திரமறிந்த; यः {யঃ} = எவன்; प्रतिवासरं {ப்ரதிவாஸரம்’} = தினந்தோறும்; तव पुरः {தவ புரঃ} = உன் மூர்த்திக்கு முன்னால் அமர்ந்து; ह्रींकारत्त्रयसंपुटेन {ஹ்ரீங்காரத்த்ரயஸம்புடேன} = மூன்று ஹ்ரீங்காரங்கள் சேர்ந்துள்ள; महता मन्त्रेण {மஹதா மந்த்ரேண} = மஹா மந்திரத்தால்; संदीपितं {ஸந்தீ³பிதம்’} = பிரகாசிக்கும்படி செய்யப்பட்ட; स्तोत्रं {ஸ்தோத்ரம்’} = ஸ்தோத்ரத்தை; जपेत् {ஜபேத்} = ஜபிப்பானோ; तस्य {தஸ்ய} = அவனுக்கு; क्षोणिभुजः {க்ஷோணிபு⁴ஜঃ} =

பூமியை பரிபாலிக்கும் சக்ரவர்த்திகள்; वशगा {வஶகா^{3}} = ஸ்வாதீனர்களாக; भवन्ति {ப^{4}வந்தி} = ஆகிறார்கள்; लक्ष्मीः {லக்ஷ்மீ:} = லக்ஷ்மி; चिरस्थायिनी {சிரஸ்தா^{2}யினீ} = வெகுகாலம்; वाणी {வாணீ} = சரஸ்வதீ; निर्मलसूक्तिभारभरिता {நிர்மலஸூக்திபா^{4}ரப^{4}ரிதா} = தோஷமில்லாத ஏராளமான நல்ல வாக்குகள் நிறைந்தவளாக; जागर्ति {ஜாக^{3}ர்தி} = ஸாந்நித்யம் கொள்கிறாள்; दीर्घं वयः {தீ^{3}ர்க^{4}ம்' வய:} = நீண்ட ஆயுள் ஏற்படுகிறது.

ஸ்ரீ வித்யா பஞ்சதசர்க்ஷரீ மந்திரத்தில் நடுவில் இரண்டும் கடைசியில் ஒன்றுமாக மூன்று ஹ்ரீங்காரங்கள் உள்ளன். இந்த மூன்று ஹ்ரீங்காரங்களுடன் கூடிய ஸ்ரீ வித்யா மந்திர்த்தால் இந்த ஸ்தோத்திரத்திற்குச் சிறந்த சோபை ஏற்பட்டுள்ளது. 15 அக்ஷரங்கள் கொண்ட ஸ்ரீ வித்யா மந்திரத்தில் உள்ள ஒவ்வொரு அக்ஷரமும் அதில் காணும் வரிசைப்படியே இந்த ஸ்தோத்திரத்தில் ஒவ்வொரு சுலோகத்திலும் முதல் அக்ஷரமாக அமைக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு 15 சுலோகங்கள். பலனைக்கூறும் கடைசி 16வது சுலோகத்திலும் ஆரம்பத்தில் ஹ்ரீங்காரம் காணப் படுகிறது. இத்தனை பெருமை வாய்ந்த மஹாமந்த்ரத்துடன் விளங்கும் இந்த ஸ்தோத்ரத்தை மந்திர மஹிமையறிந்து எவன் தினந்தோறும் உனது தீவ்யமூர்த்தியின் ஸந்நிதியில் ஜபிக்கிறானோ, (மந்திராக்ஷரங்கள் அடங்கியிருப்பதால் ஜபம் என்ற சொல்லை உடயோகித்திருக்கிறார்) அவனுக்கு சக்ரவர்த்திகள் ஸ்வாதீனர்களாகின்றனர். அவன் உத்தரவை சிரமேற்கொண்டு அதன்படியே நடந்துவருகின்றனர். சஞ்சலஸ்வபாவமுள்ள லக்ஷ்மீதேவி அவனிடம் மட்டும் வெகுகாலம் நிலையாக வாஸம் செய்கிறாள். லக்ஷ்மீ கடாக்ஷத்தால் அழிவற்ற நீங்காத எல்லாச் செல்வங்களையும் பெறுகிறான். ஸரஸ்வதியின் அருளால் வாக்ஸித்தி பெறுகிறான். அவனுடைய அளவற்ற ஸூக்திகளில் சிறிதும் குற்றம் காணமுடியாது. நீண்ட ஆயுளும் ஏற்படுகிறது.

கல்யாண வ்ருஷ்டி ஸ்தவம் முற்றும்.

Our Website :

Our You Tube :

Our Mail ID : Info@voiceofjagadguru.com



Editorial Board		
Sri P A Murali	Hon' Advisor	Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringerī
Sri S N Krishnamurthy	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
Sri Tangirala Shiva Kumara Sharma	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
PujyaSri Swami Guruparananda	Hon' Editor	Founder Poornalaya, Chennai and Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Teni
Sri B Vijay Anand	Web Director	Coimbatore
Smt. B Srimathi Veeramani	Web Asst. Director & Chief Editor	Tirunelveli